**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை - 2021**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நவதிகந்த நிலையத்திற்கு நன்கொடையாக கிடைத்த கட்டிடப் பொருட்களை உள்ளடக்கிய பொருட்கள் உரியவாறு பதிவேடுகளுக்கு கொண்டுவராமை, பென்சிலால் பதியப்பட்டமை, திகதியிடப்படாமை மற்றும் | இந்த குறைபாடுகளை சரிசெய்வதற்கும் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையம் தொடர்பாக சரியாக உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல் வேண்டும். |

தொடரிலக்கம் முறையாக குறிப்பிடப்படாமை போன்ற குறைபாடுகளும், நவதிகந்த மற்றும் கண்டி நிலையங்களில் காசேடு உரியவாறும், முழுமையாகவும் பேணிச் செல்லப்படாமை மற்றும் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை பூரணப்படுத்தப்படாமை போன்ற குறைபாடுகளும் காணப்பட்டதுடன் சபையினால் நிலையங்களின் நடவடிக்கைகள் சரியாக மேற்பார்வை செய்யப்படா திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வகுப்பிற்குரிய சகல சொத்துக்களும் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கிரயம் ரூபா 73,583,056 தொகையான காணி மற்றும் கட்டிடங்களில் ரூபா 10,447,264 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 வரையிலும் மொத்தக் கிரயம் ரூபா 63,135,792 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் அந்த கிரயத்தில் மொத்தக் கிரயம் ரூபா 10,447,264 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் அதன் மீள்மதிப்பீட்டு பெறுமதியிலும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கண்டி மற்றும் நவதிகந்த நிலையங்களில் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை, காலி மற்றும் தலங்கம என்ற 02 சிகிச்சை நிலையங்களில் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றமை மற்றும் சகல சொத்துக்களும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா | நடைமுறையல்லா சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 195,730,952 கிரயமான சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து சரியான இழிவுப் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் கழிவு திட்டத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படாதிருந்ததுடன், அந்த பொறுப்புக்கள் ரூபா 58,433,472 ஆக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | - மேற்படி - |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிரயம் ரூபா 928,085 ஆன கற்பனைச் சொத்துக்கள் ஏனைய விடயமாக வெளிப்படுத்தப்படாதிருந்த துடன் அதற்கு பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை யின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) | ஆதனங்கள், | 781.47 | 776.24 | 5.23 | வேறுபாடுகளுக்குரி | வேறுபாடுகளுக்குரி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | | | ய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும். | ய காரணங்களை கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கங்கள் | 280.36 | 286.90 | 6.54 | - மேற்படி - | - மேற்படி - |

1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | தொங்கலாக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | வருடம் | | |
| தொங்கல் கணக்கு | 480,900 | 08 | சகல மூலப் பதிவேடுகளையும் பரீட்சித்து தொங்கல் கணக்கின் மீதியின் காரணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொங்கல் கணக்கின் மீதி கூடிய விரைவில் இனங்கண்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காணப்பட்ட வரவு மீதி ரூபா 1,782,060 தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அசைவுறாது காணப்பட்டதுடன், அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை இனங்காண்பதற்கு சபையின் நிதிப்பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முற்பண கணக்கு மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் 4 ஆம் பிரிவு. | சிகிச்சை நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், ஔடதங்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை வழங்குதல் மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நிலையங்களின் வெற்றிகரத் தன்மை தொடர்பான தகவல்களை உள்ளடக்கி குறித்த காலரீதியிலான அறிக்கை சிகிச்சை நிலையங்களின் பணிப்பாளர்களினால் 2019 செப்தெம்பர் 19 ஆந் திகதி முதல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலையங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான அறிக்கை எதிர்காலத்தில் சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 138 | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 3,260,941 தொகையான 24 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உறுதிப்படுத்தப் படாதிருந்தமை தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 156(5) | காசேட்டிலும், காசு தொடர்பான ஆவணங்களிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அந்த ஏடு மற்றும் ஆவணங்களில் முதலாவதாக கையொப்பம் இட்ட அல்லது அதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏனைய உத்தியோகத்தரினால் அல்லது | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமது முழுமையான கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தப்படாதிருந்த 08 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 225 | குறித்த மாதிரிப் படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாதிருந்த 32 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | நிதிப்பிரமாணம் 395 | சபைக்குச் சொந்தமான 04 நடைமுறைக் கணக்குகளுக்கு உரியதாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்று செலுத்தும் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | நிதிப்பிரமாணம் 446(2) | சகல பதிவுகள் மற்றும் காசுமீதிகள் சரியாக இருந்தமையின் உறுதிப்படுத்தலாக பொறுப்புவாய்ந்த மேற்பார்வை மற்றும் பதவிநிலை உத்தியோகத்தரால் காசேடு கையொப்பமிட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (vi) | நிதிப்பிரமாணம் 754 | சபையில் நவதிகந்த தடுத்தல் மற்றும் சிகிச்சை புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட்டு ஆண்டின் இறுதியில் மீதி முன்கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 20/2018 | மாதாந்த சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒரு ஊழியருக்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது இணைந்தபடி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணம் உரிய ஊழியரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அரச நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபை பத்திர இலக்கம் | அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கணிப்பீட்டை விட மேலதிக நேர | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள | சபைத் தீர்மானத்தின் |

| | | | |
|---|---|---|---|
| 64/2019 | கணிப்பீட்டு மணித்தியாலங்களுக்காக சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் என 03 பேர்களுக்கு மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. | பணத்தை உரிய ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,018,049 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,697,278 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,715,327 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நவதிகந்த நிலையத்திற்காக கிடைத்த நிதியுதவி ரூபா 31,054,982 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஒன்றிணைந்த சம்மேளனம் (SLFONGOADA) என்ற பெயரிலான அரசசார்பற்ற அமைப்பு தாபிக்கப்பட்ட கட்டிடத்தின் வாடகையாக ரூபா 330,000 சபையினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் அரச சார்பற்ற அமைப்பின் ஒன்றிணைந்த சம்மேளனம் (FONGODA) 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டத்தின் கீழ் உப குழுவாக 1986 இன் போது தாபிக்கப்பட்டுள்ளதுடன் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. | சபையின் செலவினங்களை செய்வதற்காக மாத்திரம் திறைசேரி மானியங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கிய நிபுணர்களின் பயன்பாட்டிற்காக காணப்பட்ட சபையின் பிரதான அலுவலகத்தில் பேணிச் செல்லப்பட்ட போதைப்பொருள் தொடர்பான 2,689 புத்தகங்கள் மற்றும் முக்கியமான ஆவணங்கள், நாளிதழ்களை உள்ளடக்கிய நூலகம், | தற்போது நூலகத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நூலகத்தை கூடிய விரைவில் சரியாக ஸ்தாபித்து வாசகர்களுக்காக திறக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான அலுவலக வளவில் தலங்கம நிலையத்திற்கு 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது மாற்றப்பட்டிருந்தது. 2022 ஆகஸ்ட் மாதம் வரையிலும் ஒரு வருட காலம் கடந்திருந்த போதும் கிரயம் ரூபா 1,484,156 பெறுமதியான புத்தகங்கள் பயன்படுத்தப்படாமல் தலங்கம நிலையத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. நூலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த நூலகர் மற்றும் நூலக உதவி உத்தியோகத்தர்கள் பெறுகை பிரிவின் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | கண்டி, நவத்திகந்த மற்றும் காலி சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்காக ரூபா 612,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த CCTV கமெரா முறைமை செயற்படாதிருந்த போதும் அதனை பழுதுபார்ப்பதற்கோ அல்லது புதிய உபகரணங்களை பொருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமையால் அந்த நிலையங்களின் பாதுகாப்பிற்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. 2019 ஒக்தோபர் மாதத்தின் போது நவத்திகந்த நிலையத்தில் சேவை பெறுநர் தற்கொலை செய்திருந்த போதிலும் CCTV கமெரா செயற்படாமையால் அது தொடர்பான சாட்சிகளை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | CCTV கெமாரா முறைமையை செயற்படுத்துவதற்கான பெறுகை செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் காணப்படுகின்ற நிதி கஷ்டங்களின் காரணமாக திறைசேரியிலிருந்து அதற்காக நிதியேற்பாடு கிடைக்கும் வரை பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. | தேவையான உபகரணங்களை பெறுகைகளை விரைவுபடுத்து வதற்கு ஆகக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக சபையின் மூலதன செலவினத்திற்காக கிடைத்த திறைசேரி கட்டுநிதி ரூபா 16.473 மில்லியன் தொகையில் ரூபா 7.731 மில்லியன் அதாவது 47 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக நிறுவனங்கள் மூடப்பட்டமை, சேவை முறையின் பிரகாரம் ஊழியர்கள் அறிக்கையிட்டமை மற்றும் செலவினங்களை குறைப்பதற்கு ஏற்பட்டமை, மூலதன செலவினங்கள் தொடர்பான செயற்பாடுகள் தாமதமடைந்தமைக்கு காரணமாக இருந்தது. | CCTV கமெரா போன்ற அத்தியவசிய மூலதன செலவினத்திற்காக சபைக்கு கிடைக்கின்ற கட்டுநிதியை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாற்றப்பட்ட விசம், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மரணதண்டனை மற்றும் ஆயுள்காலம் வரையான சிறைத்தண்டனையை தீர்மானிப்பதற்காக ஹெரோயின், கொக்கெய்ன் மற்றும் மொபீன் அளவு 02 கிராம் முதல் 05 கிராம் வரை அதிகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு தொடர்பாக சபையின் கருத்துக்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்தினால் சபையின் பரிந்துரை அனுப்புதல் பொருத்தமற்றதாக இருந்தமை. | சபைக்குரிய சட்டத்தை திருத்தும் போது சபையின் பரிந்துரை பெறப்படல் வேண்டும். |
| (ஆ) 2010 மே 12 ஆந் திகதிய இலக்கம் 1653/19 என்ற அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் ஏதாவதொரு நபரினால் ஔடதங்களுக்கு அடிமையான நபர்களை பாதுகாத்தல் மற்றும் புனர்வாழ்வளிப்பதற்காக தனியார் சிகிச்சை நிலையமொன்று பேணிச் செல்லப்படுமாயின் அவர்களினால் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் (NDDCB) விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வது கட்டாயமாக இருந்த போதும் 2022 யூலை மாதம் வரை அனுமதிப்பத்திரம் காலாவதியான 11 தனியார் சிகிச்சை நிலையங்கள் காணப்பட்டன. 2019, 2020 மற்றும் 2021 யூலை மாதம் வரை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதால் வருமானம் முறையே ரூபா 17,000, ரூபா 13,500 மற்றும் ரூபா 4,000 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் எந்தவொரு வருமானமும் கிடைக்கப் பெறாதிருந்தமையால் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் திட்டமுறையில் குறைபாடுகள் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அனுமதிப்பத்திரம் பெறாதோர் அல்லது புதுப்பிக்காத சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களை | அனுமதிப்பத்திரம் பெறாத தனியார் சிகிச்சை நிலையங்களை ஒழுங்குபடுத்துதல் அல்லது மூடிவிடுதல் தொடர்பாக 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்களின் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டத்தின் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாதிருந்த துடன் எதிர்காலத்தில் அதற்காக தேவையான செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | தனியார் சிகிச்சை நிலையங்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டத்தில் உரிய பிரகாரம் திருத்தம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுங்குபடுத்துவதற்காக 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) சட்டம் உரிய பிரகாரம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | நீண்டகாலம் போதைப் பொருள் பயன்பாட்டில் உள்ள நபர்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டமையால் மீண்டும் மீண்டும் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களின் சேவையினை பெற்றுக்கொள்ளும் போக்கு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் சபைக்குரிய நிட்டம்புவ, கண்டி, காலி, தலங்கம என்ற சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சை காலத்தை பூர்த்தி செய்த 157 சேவை பெறுனர்கள் மற்றும் 119 பேர்கள் முறையே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மீண்டும் சிகிச்சைக்காக நிலையங்களுக்கு வருகை தந்திருந்தனர். | உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் போன்ற அமைப்புக்களின் விளக்கமளித்தல்களின் பிரகாரம் போதைப்பொருளுக்கு அடிமையாகி நோய் நிலைமையில் காணப்படுகின்றமை, சிகிச்சைக் காலத்தை பூர்த்தி செய்கின்றவர்கள் மீண்டும் மீண்டும் போதைப்பொருள் பாவனையில் தொடர்புபடுவதன் அடிப்படையில் எங்களின் சேவைகளை மீண்டும் வழங்குவதற்கு ஏற்படுவதுடன் சபையின் வெளிவாரி சேவைப் பிரிவில் 30 உத்தியோகத்தர்கள் மூலம் பின்னைய பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை, நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் சேவை பெறுனர்கள் சிகிச்சைகளுக்காக அனுப்பப்படுகின்ற போதிலும் நாட்டை மேவுகை செய்யும் வகையில் பின்னைய பராமரித்தல் சேவைகளை வழங்குவதற்கு போதியளவான பதவியணியினர் காணப்படாமை, சிகிச்சை நிலையங்களில் மாதாந்த பின்னைய பராமரித்தல் சந்திப்புக்களின் மூலம் கடந்த ஆண்டுகளில் பின்னைய பராமரித்தல் சேவைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கொவிட் தொற்றுநோய் மற்றும் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளினால் அந்த நிகழ்ச்சித் திட்டத்தையும் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு வசதியீனமாக இருந்தமை மற்றும் தொலைபேசி அழைப்புக்களின் மூலம் | பின்தொடர் நடவடிக்கைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சேவைபெறுனர்களை வருவித்து உரிய பின்னைய பராமரித்தல் சேவைகள் வழங்கப்படுகின்றது. | |
| (ஈ) | நிலையங்களில் பயிற்சிபெற்ற பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் உரிய பாதுகாப்பு படிமுறைகள் பின்பற்றப்படாதிருந்தமையால் சேவைபெறுனர்கள் தப்பிச் செல்கின்றமை உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. 2021 சனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் மாத்திரம் சேவை பெறுனர்களை விடுவித்தல்களின் 10 சதவீதம் தப்பிச் செல்கின்றமை ஆகும். | தற்போது சேவை பெறுனர்களின் பாதுகாப்பிற்காக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக பதவியணியினர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும், பதவியணியினர்களை அதிகரிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பிற்காக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவை முறையினை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தப்பிச் செல்வதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்ற மற்றும் வந்து சேருகின்ற சேவை பெறுனர்களை நிறுத்தி வைத்தல் மற்றும் அவர்களை பாதுகாக்கும் வகையிலும் வெளியில் நிறுவன சூழலில் செல்வதை தடுப்பதற்காக நவதிகந்த மற்றும் கண்டி சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களை சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக உரிய உத்தியோகத்தர்கள் களப்பரிசோதனை மேற்கொண்டு மதிப்பீட்டினை பெற்றுக்கொண்டதுடன் எதிர்காலத்தில் நிதி கிடைக்கும் முறையின் பிரகாரம் இந்த பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்காக மாற்று நிதியேற்பாட்டு முறைக்காக அனுப்புதல் வேண்டும். |
| (ஊ) | சேவை பெறுபவர்களின் செயலாற்றல் தொடர்பாக பரீட்சிப்பதற்காக நிலையத்திற்கு புலனாய்வு உத்தியோகத்தர்கள் வருகைதர வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மேற்பார்வை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. நவதிகந்த சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் புலனாய்வு உத்தியோகத்தர்களின் வருகை குறிப்புக்களுக்காக பேணிச் செல்லப்படுகின்ற பதிவேட்டின் பிரகாரம் 2022 சனவரி 11 ஆந் திகதி வரையிலும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இறுதி தடவையாக நிலையத்திற்காக 2019 மார்ச் 20 ஆந் திகதியே வருகை தந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | தற்போது புலனாய்வு நடவடிக்கைகள் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | நிலையத்தில் உரிய கால நேரத்தில் புலனாய்வுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (எ) | நவத்திகந்த சிகிச்சை நிலையத்தில் சேவை பெறுநர்களுக்குத் தேவையான சிகிச்சை நடவடிக்கைகளுக்காக | இதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பதவியணியினர் செயற்பட | போதியளவான தகைமையுள்ள பதவியணியினர் |

| | | | |
|---|---|---|---|
| | அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அனுப்பும் போது சரியான பாதுகாப்புத் திட்ட முறைமையொன்று காணப்படாதிருந்ததுடன் பதவியணியினர்கள் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் சேவை பெறுனர்கள் தப்பிச் செல்லும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. சிறைச்சாலையின் ஊடாக நீதிமன்றத்தின் மூலம் அனுப்பப்படுகின்ற சேவை பெறுனர்கள் தொடர்பாக சபைக்கு அதிக பொறுப்புக்கள் காணப்படுகின்ற போதும் இது தொடர்பாக எந்தவொரு முறையான பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய முறை தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | களை பெற்று உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப் படல் வேண்டும். |
| (ஏ) | நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்ற சேவை பெறுனர்களுக்கு புனர்வாழ்வு காலஎல்லையின் முதலாவது வாரத்தில் நிலையத்தில் பொருத்தமான சுற்றாடலொன்றை நிர்மாணிக்க வேண்டிய போதிலும் காணப்படுகின்ற வசதிகள் மற்றும் இடவசதிகள் காணப்படாமை போன்றவற்றால் சுற்றாடல் வடிவமைக்கப்படாமையால் சேவை பெறுனர்களை புனரமைப்புச் செயற்பாடுகளுக்கு உட்படுத்துதல் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கண்டி நிலையத்தில் தங்கியிருந்தவர்கள் 21 வருடங்களுக்கு குறைவான போதைப்பொருளுக்கு அடிமையான சேவை பெறுனர்களாக இருந்த போதும் நிலையம் தாபிக்கப்பட்ட கட்டிடம் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் ஏனைய வசதிகளும் குறித்துரைத்த நியமம் இன்றி காணப்பட்டது. | சேவை பெறுனர்களின் விடுதி வரையறுக்கப்பட்ட இடமொன்றில் காணப்பட்ட பழைய கட்டிடமொன்றாக இருந்தமை, அந்த இடவசதிகளை பயன்படுத்தி சேவை பெறுனர்களுக்கு விடுதி வசதிகளை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தமை மற்றும் நிலையத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சேவை பெறுனர்களுக்காக பொருத்தமான சுற்றாடலொன்றை நிர்மாணிப்பதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | போதைப்பொருளுக்கு அடிமையான நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்காக 24 மணித்தியாலம் முழுவதும் அமுல்படும் வகையில் தொலைபேசி இலக்கம் 1927 உதவி சேவை 2020 மார்ச் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆரம்பத்தின் போது தலைமை அலுவலகத்தில் பொருத்தமான தகுதியான நிலையமொன்றை மும்மொழிகளிலும் பதில் வழங்கக் | தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை போதியளவான பிரகாரம் தலைமை அலுவலகத்திற்கு வழங்குவதற்கு காணப்படுகின்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக 1927 சேவை 24 மணித்தியாலமும் அமுல்படுத்தி தலங்கம நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அந்த நிலையத்தில் வெளிச் | தொலைபேசி இலக்கம் 1927 உதவி சேவை சரியான பிரகாரம் அமுல்படுத்து வதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூடிய 13 பேர்களையுடைய பதவியணியினர்கள் உடையதாக அது அமுல்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2022 சனவரி 13 ஆந் திகதி முதல் தலங்கம புனர்வாழ்வு நிலையத்தில் தொலைபேசி உதவி சேவைக்காக பொருத்தமல்லாத இடமொன்றில் இந்த சேவை தாபிக்கப்பட்டிருந்ததுடன் 04 பேர்களையுடைய பதவியணியினருடன் செயற்படுகின்றமையால் சரியாக விளைவை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சத்தங்கள் இடம்பெறாத வகையில் தனியாக Partition அலகு பொருத்துவதற்காகவும், 1927 சேவைக்காக நிரந்தர உத்தியோகத்தர்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தற்போது காணப்படுகின்ற பதவியணியினர் பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்காக இவ்வாறு வெளிசேவை பிரிவின் உத்தியோகத்தர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (ஒ) | தற்போது வரையில் பெண்கள் போதைப்பொருளில் ஈடுபடும் போக்கு அதிகரித்து காணப்பட்ட போதும் சபையில் பெண் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான கவனம் குறைந்திருந்தது. 2019 ஆம் ஆண்டில் பெண் சேவை பெறுனர்கள் 29 பேர்களுக்கும், 2020 ஆம் ஆண்டில் 21 பேர்களுக்கும் 2021 ஆம் ஆண்டில் ஒரு சேவை பெறுனரும் ஆக சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தற்போது எந்தவொரு சேவை பெறுனருக்கும் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெண்கள் புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கப்பட்டமை பதவியணியினர் பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் புனர்வாழ்வு நிலையங்களில் சேவைகளுக்குரிய பணிகளுக்காக சேர்க்கப்பட்ட 15 பெண் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 29 பேர்கள் சபையின் ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களுக்கு வதிவிட புனர்வாழ்வு அளிப்பதற்கு காலி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அத்தியவசிய பௌதீக வளங்களை கட்டியெழுப்பும் நோக்கில் தேவையான நிதி ஏற்பாடு இல்லதிருந்தமை, பெண்கள் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக ஆலோசனை ரீதியாக முன்வருதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் அதற்காக தேவையான உதவிகள் சிறைச்சாலை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றது. | பெண்களுக்கான சிகிச்சை நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்து வதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபையினால் பேணிச் செல்லப்பட்ட மதியுரை சான்றிதழ் பாடநெறிக் கட்டணமாக கிடைத்த ரூபா 1,740,000 தொகையில் ரூபா 435,000 தொகை மற்றும் ரூபா 87,000 முறையே நலன்புரி சங்கம் மற்றும் பௌத்த சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | 2019 பெப்ரவரி 26 ஆந் திகதிய சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சகல வருமானங்களும் சபையின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

3.5 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 4,027,518 செலவில் முப்பது வருட வாடகை அடிப்படையில் ஹோமாகமயில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அதனை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் பரிந்துரையின் பிரகாரம் இந்த காணி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மீண்டும் கையளித்து அதற்குப் பதிலாக வேறொரு பொருத்தமான பிரதேசத்தில் காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள 06 வருடங்களுக்காக குறித்த வாடகை தொகையை வழங்கி மிகுதி பணத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு உள்ள இயலுமை கவனத்தில் கொள்வதற்கோ நடவடிக்கை எடுப்பதாக சபை தீர்மானித்துள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்று வதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2015 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 3,884,160 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட வீடியோ பெனல் தொழில்நுட்ப ஆலோசனை உறுதிப்படுத்தல் இன்றி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. திறக்கப்பட்ட திகதி முதல் மற்றும் 03 வருட உத்தரவாதக் காலத்தின் போது இந்த பெனல் 06 தடவை செயலிழந்திருந்ததுடன் 2022 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எந்தவொரு | இது தொடர்பாக அறிக்கையிடுவதற்காக ஐந்து உத்தியோகத்தர்களை உடைய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் உரிய அறிக்கை கிடைத்ததன் பின்னர் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களை இனங் காண்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | சேவை பெறுனர்களுக்காக தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்காக நவதிகந்த சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் தேவையான உபகரணங்களையுடைய தொழிற் பயிற்சி நிலையமொன்று காணப்பட்ட போதிலும் அதற்கான அறிவை வழங்குவதற்கு போதியளவான அனுபவமுடைய உத்தியோகத்தர்களின் சேவை பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாடல் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தேவையின் அடிப்படையில் உரிய உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதுடன் உரிய தொழில் பயிற்சி நிலையத்தை மீண்டும் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | இந்த தொழில் பயிற்சி நிலையத்தை விரைவாக செயற்படு நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். |

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்காக 36000 BTU வளிப்பதனாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்யும் பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது இயந்திரத்தின் விலை மற்றும் பராமரிப்பு கிரயத்தின் தற்போதைய பெறுமதி இரண்டையும் ஒரே தடவையில் கருதாமல் இயந்திரத்திற்காக ஆகக்குறைந்த கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ரூபா 241,380 தொகையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரரால் சமர்ப்பிக்கப்பட்ட இயந்திரத்தின் பராமரிப்புக் கிரயம் ஏனைய கேள்வி தாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பராமரிப்பு கிரயத்தை விட மிகவும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்களை மாற்றியமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை சரியாக பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 11 மடி கணனிகள் மற்றும் 07 மேசைக் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,302,050 செலவிடப்பட்டிருந்தது. தேவைகள் தொழில்நுட்ப மாதிரிகளின் பிரகாரம் மடி கணனிகளின் திரையின் மூலைவிட்டம் 15.6 அங்குலமாக இருக்க வேண்டிய போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட மடி கணனிகளின் மூலைவிட்டம் 14 அங்குலமாக இருந்தமையாலும், மூலைவிட்டம் 15.6 அங்குல அளவான மடி கணனி | சந்தையில் விலைத் தளம்பல்களினால் இந்தக் கொள்வனவுகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்தமையாலும், உரிய மாதிரிகளில் சிக்கலான நிலையில் வேறுபாடுகள் காணப்படாதிருந்த மையினாலும் இந்தக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் | முறையான பரிசோதனைகள் மேற்கொண்டு நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலையிலேயே கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக தேவைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் நிதிரீதியான நட்டமும் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக வீட்டிலிருந்து இணையவழி ஊடாக வேலைகளை மேற்கொள்கின்ற மற்றும் மக்களுடன் நெருங்கிய நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்ற தரப்பினர்களுக்கு இயந்திரங்கள் காணப்படாமையின் அடிப்படையில் நிறுவன நடவடிக்கைகளை சுமூகமாக பேணிச் செல்வதற்கு முடியாதிருந்தமையால் கோரப்பட்ட மாதிரிகளுக்கு புறம்பாக இந்த கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | |
| (இ) | தென் மாகாண சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் சேவை பெறுனர்களின் விடுதியில் கூரை மற்றும் யன்னல்களுக்காக பாதுகாப்பு இரும்பு வேலி பொருத்துவதற்குரிய பெறுகை நடவடிக்கைகளுக்காக 02 நிறுவனங்களிலிருந்து 2021 யூன் 18 ஆந் திகதியிலும், மேலுமொரு நிறுவனத்திலிருந்து 2021 யூன் 23 ஆந் திகதியிலும் கேள்வி கோரப்பட்டிருந்தமையினாலும், 2021 யூன் 23 ஆந் திகதி உரிய கேள்வி கோரலின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி 2021 யூன் 21 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்தமையால் மற்றும் கேள்வி கையேற்றல் இறுதி திகதியின் 07 தினங்களுக்கு பின்னர் கிடைத்த கேள்வி நிராகரிக்கப்படாமல் கையேற்கப்பட்டு ரூபா 474,140 தொகையான ஒப்பந்தப் பெறுமதியுடன் அந்தக் கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் காரணமாகவும் பெறுகை வெளிப்படையான பாதுகாப்பின்றி இருந்தமையும், போலியாக கேள்வி கோரப்பட்டிருந்தமையும், அதன் காரணமாக நிதிரீதியான மோசடி ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனை யொன்றை மேற்கொண்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2022 யூலை 01 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 37 சதவீதத்திற்கு சமமான வெற்றிடப் பதவிகள் 138 காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 63 சதவீதத்திற்கு சமமான பதவியணியினர் சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணப்படுகின்ற பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்கள் வரிசை அமைச்சு உத்தியோகத்தர் களின் மூலம் கடமைகளை மேவுகை செய்யும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, நிலையம் மற்றும் கள கடமைகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்காக பிரதேச செயலகத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி படையணி திணைக்களத்தின் அலுவலக உதவியாளர்கள் மூலம் மேவுகை செய்யப்படுகின்றமை, 56 பதவிகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளமை, சில பதவிகளுக்காக பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளமை மற்றும் 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 21/1596/304/134 ஆம் இலக்க நிதியமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்த்துக் கொள்ளல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளமையால் ஊழியர்களை சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | உரிய ஆய்வின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருத்தமான பிரகாரம் திருத்துதல் வேண்டும். |
| (ஆ) சபையின் உயர் முகாமைத்துவ நிலையில் 06 பதவிகளில் 03 பதவிகளும், நடுத்தர முகாமைத்துவ நிலையில் 14 பதவிகளில் 06 பதவிகளும் மீளாய்வாண்டின் போது வெற்றிடமாகக் காணப்பட்டது. அதில் பணிப்பாளர் (நிர்வாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) என்ற பதவிகள் 2013 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது. | இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதிருந்தமை, இந்த வெற்றிடங்களை மீண்டும் | இவ்வாறான அத்தியவசிய பதவிகளுக்காக தகைமையுடன் உள்ள உத்தியோகத்தர் களை நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ள சகல முயற்சிகளும் மேற்கொள்ளப் |

| | | |
|---|---|---|
| | நிரப்புவதற்காக 2021 நவம்பர் 02 ஆந் திகதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் தற்போது அமைச்சின் உத்தியோகத்தர்கள் இருவர் இந்த பதவிகள் இரண்டின் கடமைகளை மேவுகை செய்கின்றனர். | படல் வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் சபையின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்தும் ஏழு பிரிவுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 100 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் அது மற்றும் அதற்கு சமமான ஏழு பிரிவுகளில் நிதிசார் செயல்முன்னேற்றம் 0 வீதம் 57 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்தும் பௌதீக செயல்முன்னேற்றம் மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றத்திற்கிடையே அசாதாரண முரண்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சபையில் காணப்பட்ட நிதி கஷ்டங்களினால் போதியளவான நிதியேற்பாட்டை பெற்றுக் கொள்ள முடியாமையின் அடிப்படையில் நிதிசார் செயல்முன்னேற்றம் குறைவடைந்திருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட திட்டங்களை காலரீதியில் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |